# செண்பகத் தமிழ் அரங்கு

# 500



## தமிழ்ப் பெருவிழா சிறப்பு மலர்

(2001 ஜூலை 20, 21 & 22)

# முன்னுரை...

'நினைவெலாம் அவளுமானாள்
நெஞ்சினில் தமிழுமானாள்
கனவெலாம் அவளுமானாள்
கவிதையில் கலையுமானாள்'

என் இனிய துணைவியார் செண்பகவல்லியின் நினைவைப் போற்றும் எண்ணத்தாலும், தமிழின்பால் எனக்குள்ள ஈடுபாட்டினாலும் என்னால் தொடங்கப்பெற்ற தமிழ் அமைப்பே செண்பகத்தமிழ் அரங்கு ஆகும். அது இன்று ஆல்போல் தழைத்து, அருகுபோல்வேரோடி, ஐந்நூறு கூட்டங்களைத் தாண்டி அழகு நடைபோடுகிறது.

ஐந்நூறுகூட்டங்கள் தானா? என்ற வினா எழுப்புவார்க்கு, அதை ஒவ்வொன்றாக எண்ணிப்பார்த்தால்தான் அதன் அருமையும், பெருமையும் புரியும். இவ்வாறு செண்பகத்தமிழ் அரங்கு ஐந்நூறு கூட்டங்களை நிறைவு செய்ததை எண்ணிய என்நெஞ்சம் பெருமிதத்தால் விம்முகிறது; மகிழ்ச்சியால் துள்ளுகிறது. அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் தமிழ்ப்பெருவிழா எடுக்க விரும்பினேன். அந்நாளில், செண்பகத்தமிழ் அரங்கு பற்றிய முழுமையான செய்திகளை உள்ளடக்கிய சிறப்பு மலர் வெளியிடவும் விரும்பினேன். அதன் விளைவே இந்த மலர்.

இம்மலரில், செண்பகத்தமிழ் அரங்கில் நடந்தேறிய 500கூட்டங்கள் பற்றிய செய்திகளை உள்ளடக்கிய ஓர் ஆவணம் வெளிவருவதே இம்மலரின் தனிச்சிறப்பாகும். இது வருங்கால சமுதாயத்திற்கு ஒரு வரலாற்றுப் பதிவேடாகும்.

இம்மலரை வெளிக்கொணர மெய் வருத்தம் பாராது, கண் துஞ்சாது அரும்பணியாற்றிய அன்பு உள்ளம் கொண்ட திரு. மழவைநாதன், திரு. விஸ்வநாதன் கண்டராதித்தன் ஆகிய இருவர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மலருக்கு விளம்பரம் நல்கிய பெருமக்களுக்கும் அப்பெரும் பணிக்கு உதவிய பொறிஞர். ச. அசோகன் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன். மேலும், இம்மலரை நல்ல முறையில் அச்சிட்டு உதவிய சென்னை, ககன் கணிப்பொறி உரிமையாளர் திரு. தி. தியாகராசன் அவர்களுக்கும், கௌரா ஏஜென்சிஸ் உரிமையாளர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும் என்நன்றி.

மிகச்சிறந்த சான்றோரான 'இயல்இசைவித்தகர்' திரு. தி. கமலைத் தியாகராசன் இந்நூலை வெளியிட்டுச் சிறப்பிப்பது அரங்கு செய்த பேறுகளிலெல்லாம் பெரும்பேறு.

தமிழ் அமைப்புகளின் வரலாற்றில் செண்பகத்தமிழ்அரங்கின் இச்சாதனையை தமிழ் மக்கள் ஏற்றுப் போற்றுவார்களாக.

108, காந்தி சாலை, திருவரங்கம்,
திருச்சிராப்பள்ளி - 620 006.

அன்புடன்,
க. இராசவேலு செண்பகவல்லி

*With Best compliments from...*

**A.SELVARAJ**

710991
98424 - 57775

• GREAT FIT • GREAT STYLE • A GREAT FEELING

# Teenage
# tailors

**" BEST TAILOR IN TRICHY "**

*- Awarded by Tamilnadu Consumer Welfare Council, Trichy*

*No. 13-B, JOSEPH COMPLEX, CHATRAM BUS STAND, TRICHY - 2.*

*www.teenagetailors.cjb.net*